# சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2017

சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புகளை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளிளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வுஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01 - நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்**

(i) நியமத்தின் பிரகாரம், ஏதேனும் நிறுவகத்தின் சொத்துக்கள் அந்த நிறுவனத்தின் சொத்துக்களாக கருதப்படுமானால், அந்த சொத்துக்கள் நிறுவனத்தினாலேயே கட்டுப்படுத்தப்பட வேண்டியதுடன் நிறுவனத்தின் நோக்கங்களினை அடைந்துகொள்வதற்கு பயன்படுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 114,015,071 ஆக நடைமுறையல்லாச் சொத்துக்களின் மீதிகீழ்க்கொண்டுசென்ற தொகை அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும், நிதியத்தின் நோக்கங்களினை அடைந்துகொள்வதற்கு பயன்படுத்துவதற்குப் பதிலாக அவற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இலங்கை சுங்கத்தினால் அந்த சொத்துக்கள் பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், அந்த சொத்துக்கள் தொடர்பில் மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வாக ரூபா 31,545,264 தொகையொன்று நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் செலவினமாக கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 21(உ) பந்தியின் பிரகாரம், நிறுவனம் அதன் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டை கிடைக்ககூடியதாக பிரசித்தப்படுத்தும் போது, நிதிக்கூற்றுக்களில் பாதீட்டின் ஒப்பீடொன்று நிதிக்கூற்றுக்களுக்கு மேலதிகமான தனியானதொன்றாகவோ அல்லது பாதிடப்பட்ட நிரலொன்றாகவோ உள்ளபடியான தொகைகளுக்கு மேலதிகமாக சுட்டிக்காட்டப்படல் வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் பாதிடப்பட்ட தகவல் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 - கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் பிழைகளில் மாற்றங்கள்**

கணக்கீட்டுக் கொள்கைகளிலிலான மாற்றங்களின் வெளிப்படுத்துகை நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படவேண்டிய போதிலும், முன்னைய ஆண்டின் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு தீர்மானிக்கப்பட்ட 03 வருடங்கள் பயன்படு ஆயுட்காலம், மீளாய்வாண்டில் 05 ஆண்டுகள் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. ஆகையினால், பெறுமானத்தேய்வு சதவீதம் 33 1/3 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், இது தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ)** **இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

நியமத்தின் 13 ஆம் பந்தியின் பிரகாரம், ரூபா 349,000 பெறுமதியுடைய கணனி மென்பொருட்கள், தனியாக தொட்டுரணமுடியாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டிராது கணனி கணக்கின் கீழ் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சுங்கம் மற்றும் இந்நிதியத்தின் பயன்பாட்டிற்கு மீளாய்வாண்டில் கொள்வனவுசெய்யப்பட்ட ரூபா 1,603,625 பெறுமதியுடைய எழுதுகருவிகளில், நிதியத்தின் நோக்கங்களுக்குத் தேவையான எழுதுகருவிகளின் கிரயம் மற்றும் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான மிகுதியாகவுள்ள இருப்பின் கிரயம் தனித்தனியாக இனங்காணப்படுவதன் மூலம் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்காத அதேவேளை, அவற்றின் மொத்தக்கிரயம் நிதியத்தின் செலவினமொன்றாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) தெரிவுக் கணக்காய்வுப் பரீட்சிப்பின் பிரகாரம், சுங்க வெகுமதிகளின் கணிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட 05 புலனாய்வு கோவைகளுடன் தொடர்புடைய முகாமைத்துவம், மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு கிடைக்கவேண்டிய வருமானக் கணிப்பீட்டின் பிழைகள் காரணமாக நிதியத்தின் வருமானம் ரூபா 3,359,985 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) சுங்க கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவின் பிரகாரம், அபராதங்களிலிருந்தான வருமானம் மற்றும் பறிமுதல்செய்யப்பட்ட பொருட்கள் விற்பனைகளிலிருந்தான வருமானத்தில், சுங்க உத்தியோகத்தர் வெகுமதி நிதியம் மற்றும் முகாமைத்து மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு முறையே 50 சதவீதம் மற்றும் 20 சதவீதம் பங்களிப்புச்செய்யப்படல் வேண்டும். அந்த பங்களிப்புக்கள் சுங்க உத்தியோகத்தர்களின் வெகுமதிகள் நிதியத்தின் வருமானமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதற்கான விகிதத்தில், ரூபா 31,520,337 தொகையொன்று முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கான வருமானமாக இனங்காணப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிலையான சொத்துக்களின் 04 வகைகள் மற்றும் 02 வகைகளுக்கான பெறுமானத்தேய்வு, நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினை கணிப்பிடுகையில் பிழைகள் காரணமாக மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் முறையே ரூபா 254,706 மற்றும் ரூபா 172,143 இனால் மிகையாக மற்றும் குறைவாகக் கணிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.3 விபரிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அபராதங்களிலிருந்தான வருமானம் மற்றும் பறிமுதல்செய்யப்பட்ட பொருட்களின் விற்பனையிலிருந்தான வருமானம் 50 சதவீதமானவை மற்றும் மீளாய்வாண்டுடன் தொடர்புடைய இந்த நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்ட ரூபா 2,316,128,767 தொகை தொடர்பில் 20 சதவீதமானவையுமான இந்த நிதியத்திற்கு கிடைக்கவேண்டிய ரூபா 926,451,507 தொகைக்குப் பதிலாக சுங்க உத்தியோகத்தர் வெகுமதி நிதியத்திற்கு ரூபா 918,440,564 வருமானமொன்று மாத்திரம் செலவுவைக்கப்பட்டிருந்தமையினால், இந்த நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்ட வருமானம் ரூபா 8,010,943 இனால் குறைத்துக்குறிப்பிடப்பட்டது. எவ்வாறாயினும், இந்த வித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அகல்விரிவான வருமானக்கூற்றின் பிரகாரம், வெளிநாட்டு, உள்ளூர் மற்றும் பட்டப்பின்படிப்பு மீதான வெளிநாட்டு பயிற்சிகளுடன் தொடர்புடைய செலவின வகைகளின் பெறுமதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பேரேட்டுக் கணக்குகளின் பெறுமதிகளுக்கிடையே ரூபா 1,556,281, ரூபா 1,249,234 மற்றும் ரூபா 410,125 வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டது.

(இ) திறைசேரி புத்தகங்களின் மீதிகள் மற்றும் நிதியத்தின் திரண்ட மீதியின் கீழுள்ள திணைக்கள புத்தகங்களுக்கிடையே மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் ரூபா 462,120 மற்றும் ரூபா 2,335,549 வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டிற்கு உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 14,541,567 தொகையான பெறுமானத்தேய்வு சரிப்படுத்தலுடன் தொடர்புடைய விபரமான விளக்கங்கள் கணக்காய்விற்குக் கிடைக்கக் கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் விபரமான பட்டியலொன்றுகூட கணக்காய்விற்கு கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், நிதியத்தின் மிகைகளினை, முன்னைய ஆண்டிற்கான ரூபா 727,612,118 மிகைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா 728,808,304 ஆகக் காணப்பட்டிருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,196,186 முன்னேற்றமொன்றைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 19,376,952 இனால் மொத்தச் செலவினம் குறைவடைந்தமை மற்றும் ரூபா 18,180,766 இனால் நிதியத்தின் மொத்த வருமானம் அதிகரித்தமை மேற்குறித்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகக் காணப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இந்த நிதியத்திற்கான ஏற்பாடுகள் சுங்க உத்தியோகத்தர்களின் வினைத்திறனான முகாமைத்துவத்தினை முன்னேற்றுவதற்கு மற்றும் உத்தியோகத்தர்களின் இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக திட்டமிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட கட்டளை விதிகள் மற்றும் துல்லியமான நோக்கத்தினையுடைய எதிர்கால குறிக்கோள்கள் மீதான செலவினங்களின்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமையினால், வருடாந்தம் நிதியத்தின் திரண்ட மீதியில் தொடர்ச்சியான அதிகரிப்புக்கான போக்கொன்று அவதானிக்கப்பட்டது. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,420 மில்லியனாகக் காணப்பட்ட நிதியத்தின் திரண்ட மீதி, 2017 திசெம்பர் 31 அளவில் ரூபா 6,164 மில்லியன் வரை ரூபா 744 மில்லியன் அல்லது 14 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டு வருமானத்தின் ஏறக்குறைய 81 சதவீதம் நிதியத்தில் திரண்டு காணப்பட்டமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிதியத்தின் வருமானம் ரூபா 918 மில்லியனாகக் காணப்பட்டிருந்த போதிலும், நிதியத்தின் பிரதான நோக்கங்களுக்கு செலவிடப்பட்ட தொகை அண்ணளவாக ரூபா 134 மில்லியனாகக் காணப்பட்டிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

சுங்க தவறுகள் மீது அபராதங்கள் விதிக்கும் போது, இழக்கப்பட்ட அரசாங்கத்தின் வரி வருமானம்கூட அபராதத்தின் பகுதியொன்றாக கருதப்படுகின்றதுடன் அந்த அபராதத்தின் அடிப்படையில் உத்தியோகத்தர்களின் வெகுமதிகள் தீர்மானிக்கப்படுகின்றது. ஆகையினால், உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட காசு வெகுமதிகளில் அதிகரிப்பொன்றும் அத்துடன் இந்த நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் அதிகரிப்பொன்றும் அவதானிக்கப்பட்டன.

## 4.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு திறைசேரியில் தொடர்ந்தும் காணப்பட்ட வைப்புக் கணக்கிலிருந்து திறைசேரியினால் செலவிடப்பட்ட ரூபா 37,708,104 கூட்டுத்தொகையொன்று அந்த நிதியத்தின் அல்லது இலங்கை சுங்கத்தின் மற்றுமொரு நிதிக்கூற்றில்கூட உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இந்த செலவினம் இலங்கை சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் மீதான நிறுவனத்திற்கு தொடர்பற்றதாகக் காணப்படுகின்றதுடன் இலங்கை சுங்கத்தின் ஏற்பாடுகளின் மீது இந்த செலவினம் ஏற்படவுள்ளமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மேலும், இலங்கை சுங்கத்தின் 01.01.1203 ஆம் இலக்க செலவின விடயங்களின் கீழ் ஏற்படவுள்ள சீருடைகள் மீதான செலவினம் முகாமைத்துவம் மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் கீழ் ஏற்பட்டிருந்தது. ஆகையினால், முன்னைய ஆண்டில் ரூபா 312,825 ஆகக் காணப்பட்ட சீருடைகள் மீதான செலவினம், மீளாய்வாண்டில் ரூபா 7,527,280 வரை 2306 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

# 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரம் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

அபராதங்களிலிருந்தான வருமானம் மற்றும் பறிமுதல்செய்யப்பட்ட பொருட்களிலிருந்தான விற்பனைகள் வருமானம் போன்ற நிதியத்தின் 02 பிரதான வருமான வகைகளின் பாதிடப்பட்ட பெறுமதிகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே 51 சதவீதம் மற்றும் 95 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

# 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வவ்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வெளிநாட்டு பயிற்சி | வெளிநாட்டு பயிற்சிகளுக்காக உத்தியோகத்தர்களைத் தெரிவுசெய்வதற்காக முறையான முறைமையொன்றை பின்பற்றத் தவறியமை. |
| (ஆ) | வருமான சேகரிப்பு | நிதியத்திற்கு கிடைக்கவேண்டிய வருமானம் மற்றும் கிடைத்த வருமானம் என்பவற்றை ஒப்பிடுவதற்கு முறையான முறைமையொன்றின் பற்றாக்குறை. |
| (இ) | கணக்கீடு மற்றும் இணக்கக் கூற்றுக்களின் தயாரிப்பு | முறையான இரட்டைப் பதிவு முறைமையுடனான இணக்கப்பாடின்றி மற்றும் பேரேட்டுக் கணக்குகளினை பேணாது நிதிக்கூற்றுக்களுக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல். |
| (ஈ) | கட்டுப்பாட்டுக் கணக்குகளினை தயாரிக்காமை | இலங்கை சுங்கத்தின் பிரதான கணக்குகளுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களில் கட்டுப்பாட்டுக் கணக்கொன்றினூடாக கொடுக்கல் வாங்கல்களினை பதிவுசெய்யத் தவறியமை. |